# ஐக்கிய தீபம்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வெளியீடு

மலர் : 27
இதழ் : 9, 10

யாழ்ப்பாணம்
1972
வைகாசி, ஆனி

## கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் ... ... | -04 |
| 2. | கடன் முறிப்பத்திரம் ... ... | -05 |
| 3. | மத்தியஸ்தத்திற்கு மனு ... ... | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் ... ... | -05 |
| 5. | அங்கத்தவர் பாஸ் புத்தகம் (நாணய சங்கம்) ... | -25 |
| 6. | ப. நோ. கூ. சங்கப் பாஸ் புத்தகம் ... ... | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு ... | 8-00 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) ... | 3-50 |
| 9. | ,, ,, (பண்டசாலை) ... ... | 9-00 |
| 10. | கடன் இடாப்பு ... ... | 4-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு ... ... | 2-25 |
| 12. | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) ... ... | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) ... ... | 7-00 |
| 14. | ,, (ப. நோ. கூ சங்கம்) ... ... | 6-00 |
| 15. | சிட்டைப்புத்தகம் 20/1 ... ... | 3-25 |
| 16. | ,, 8/1 ... | 3-75 |
| 17. | மனேஜர் பிணைப்பத்திரம் ... ... | -20 |
| 18. | பொருள் பேரேடு ... ... | 7-00 |
| 19. | அங்கத்துவ மனுப்பத்திரம் ... ... | -03 |
| 20. | பங்கு இடாப்பு ... | 3-50 |
| 21. | பங்குப்பணச் சிட்டை ... | 1-30 |
| 22. | விலைபொருள் இடாப்பு ... ... | 6-25 |
| 23. | உபவிதிகள் ப. நோ. கூ. சங்கம் ... ... | -40 |
| 24. | விவசாயக்கடன் மனுப்பத்திரம் ... ... | -10 |
| 25. | விவசாயக்கடன் முறிப்பத்திரம் ... ... | -05 |
| 26. | நெசவுச்சங்க உபவிதி ... ... | -40 |
| 27. | சமாசங்களின் கணக்குமுறை ... ... | 2-50 |
| 28. | ப. நோ. கூ. ச. சமாச உபவிதி ... | -45 |
| 29. | செக்கவிற்பனவுச் சிட்டை (நெசவு) ... | 2-00 |
| 30. | நடற்தொழிலாளர் கூ. க. வி. சங்க உபவிதி ... | -75 |
| 31. | டைமுறைவிதிகள் (கடற்தொழிலாளர் சங்கம்) | -75 |
| 32. | உறுப்புரிமை விண்ணப்பப்பத்திரம் ... ... | -05 |
| 33. | நியமன விண்ணப்பம் இல. 2 ... | -04 |
| 34. | ,, இல. 3 ... ... | -04 |
| 35. | கொள்வனவு பாஸ் புத்தகம் ... ... | -75 |
| 36. | கூட்டுறவுக்கொடி (பெரியது) ... ... | 5-00 |
| 37. | ,, ,, (சிறியது) ... ... | 2-00 |
| 38. | ஊழியர் சகாயநிதி-பத்திரம் 'சி' புத்தகம் ... | 5-00 |

**வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை**

காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

## இந்த இதழில் ...

ஆசிரியர் தலையங்கம் 3

சர்வதேசக் கூட்டுறவுத்தின வாழ்த்துக்கள் 5

நவீன முறையில் கடல் அட்டைத்தொழில் அபிவிருத்தி 9
— ஸ்ரனிஸ்லாஸ்

அனைத்துலகக் கூட்டுறவுத்தினம் 15

கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள் 17

மறுசீரமைக்கப்பட்ட கட்டுத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதிகள் 24

# உங்கள் தேவைக்கான
## எமது உற்பத்திப் பொருள்கள்

* திறம் செயற்கைப் பட்டுப் புடவைகள்,
* சாயம் மங்காத உறுதியான கைத்தறிச் சேலைகள், சாரங்கள், விரிப்புகள்.
* சுவைமிக்க பிஸ்கட், கேக், பாண், பணிஸ் வகைகள்.
* குழந்தைகளுக்கான அழகழகான உடைகள்.

### பிற பொருட்கள்

* உணவுப் பொருள்கள்
* கட்டடப் பொருள்கள்
* அலுமினியப் பாத்திரங்கள்
* புடவைகள், சேட் வகைகள்
* நீர் இறைக்கும் இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள்
* பூச்சி கொல்லி, களை கொல்லிகள்

குறைந்த விலையில் எங்களிடம் கிடைக்கும்.

எமது உற்பத்திப் பொருள்களை வாங்கும் வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

**பண்டத்தரிப்பு கோவிற்பற்று**
**ப. நோ. கூ. சங்கம்**
**பண்டத்தரிப்பு.**

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

ஆசிரியர்: து. சீனிவாசகம், B.A., J.P.

மலர் 27 | யாழ்ப்பாணம், வைகாசி, ஆனி 1972 | இதழ் 9, 10


## ஐந்தாண்டுத் திட்டம்

இலங்கை அரசு ஐந்தாண்டுத்திட்டம் ஒன்றினை அமுல் நடாத்துவது யாவரும் அறிந்ததே. இத்திட்டத்தின் கால எல்லை 1972 தொடக்கம் 1976 வரையாகும். இக்கால எல்லைக்குள் மிகவும் பின்தங்கிய இலங்கையின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இன்னொரு வகையில் எடுத்துரைப்பதாயின் இக்கால எல்லைக்குள் வேலைவாய்ப்பற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் வருமான ஏற்றத்தாழ்வைச் சரிப்படுத்துவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வேலையில்லாப் பிரச்சினை மிக்கமோசமாக இருந்தமையே 1970ம் ஆண்டில் வாலிபர்களின் கிளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகும். ஆகவே, அரசாங்கம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சி வரவேற்க வேண்டியதொன்றாகும். சனத்தொகை கூடிக்கொண்டே போகிறது. அத்துடன் ஆண்டுதோறும் வேலைவாய்ப்புப் பெறவேண்டியவர்களின்தொகை அதிகரித்துக்கொண்டு போகின்றது. இந்த ஐந்தாண்டுத்திட்டத்தில் விவசாயத்தைப் பெருக்கியும், கைத்தொழில்களை ஆரம்பித்தும் வேலைவாய்ப்புக்கொடுப்பதற்கு வழிவகை செய்வதுடன் வளர்ந்துகொண்டு போகும் குடிசனத்தைக் கட்டுப்படுத்தக் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளையும் மக்கள் கையாளுவதைத் துரிதப்படுத்தவும் வழிகள் காணப்பட்டிருக்கின்றன.

1959ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டு முடியவுள்ள காலத்தில் மக்களது

வருமானம் ஒரு சிறிதளவே கூடியிருக்கிறது. ஆயின் பொருள்களின் விலைகள் மிக்க அதிகமாகக் கூடிவிட்டன. அத்துடன் உழைப்பாளிகள் குறைவாகவும் அவர்களில் தங்கியிருப்போரின் தொகை கூடுதலாகவும் காணப்படுகிறது. கணிசமான வருமானம் உள்ளவர்கள் குறைவாகவும் மிகக் குறைவான வருமானமுள்ளவர்கள் கூடுதலாகவும் உள்ளனர். க்காரணங்கள் வாழ்க்கைத்தரத்தை மிகவும் குறைக்கின்றது. இவ்வைந்தாண்டுத் திட்டத்தில் இக்குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் காணப்பட்டிருக்கின்றன.

அன்னியச்செலாவணிப் பிரச்சினை மோசமாகி வருகிறது. எமது ஏற்றுமதிப் பொருள்களின் விலை குறைவாகவும் இறக்குமதிப்பொருள்களின் விலை கூடுதலாகவும் இருக்கிறது. அத்துடன் இறக்குமதிப் பொருள்களுக்குச் செலவாகும் பணம் மிகவும் கூடுதலாகவும், ஏற்றுமதிப்பொருள்களுக்குக் கிடைக்கும் பணம் சிறிதளவாகவும் இருக்கிறது. அத்துடன் நுகர்ச்சிப்பொருள்களுக்கு 88 வீதம் செலவாகிறது.

எமது கல்விமுறையும் நாட்டிற்கு உகந்ததாகக் காணப்படவில்லை. கல்விப் பொதுத்தராதரம் சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த பலரும், சொற்ப படிப்புள்ள வாலிபரும் அரசாங்கம், கூட்டுத்தாபனம், கூட்டுறவுச்சங்கம் ஆதியனவற்றில் எழுதுவினைஞராகச் சேரவே விரும்புகின்றனர். எமது பெண்களும் சம்பளம் குறைவானாலும் காற்சட்டை அணிந்த ஆடவரையே மணம் செய்து கொள்ள விரும்புகின்றனர். இதனால் உற்பத்தியில் ஈடுபடுபவர்களின் தொகை குறைவாகவும், உற்பத்தி குறைவாகவும் இருக்கிறது.

மேற்கூறிய காரணங்களால் மக்களிடம் சேமிப்பு குறைவாக இருக்கிறது. இதனால் தொழில்விருத்திக்கு மூலதனம் பெறமுடியாது மற்றைய நாடுகளிடம் தொழில்விருத்திக்குக் கடன்பட வேண்டியநிலை ஏற்படுகிறது.

இக்குறைபாடுகளுக்குத் தீர்வுகாணும் நோக்கமாகவே ஐந்தாண்டுத்திட்டம் வகுக்கப்பட்டு அமுலில் கொண்டுவரப்படுகிறது.

## சர்வதேசக் கூட்டுறவுத்தின வாழ்த்துக்கள்

# இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

நாட்டினது பொருளாதார, விவசாய, கைத்தொழில், சமூக அபிவிருத்தியில் கூட்டுறவு இயக்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள முக்கிய பாகம் பற்றி நாங்கள் யாவரும் அறிந்ததே. வருங்காலத்தில், இப்பாகமானது முக்கியத்துவம் மிக்கதாக விளங்கும். கூட்டுறவு இயக்கம், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புமிக்க பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டுமாயின், இந்நாட்டின் பிரஜைகள் யாவரும் தங்களது ஒத்துழைப்பினை அதற்கு நல்குதல் அவசியமாகும். இதன்பொருட்டுச் செய்ய வேண்டியது யாதெனில், ஒவ்வொருவரையும் பொறுத்தவகையில், அவர்கள் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களாக இருந்தாலும்சரி, சங்கத்தின் அங்கத்தினராக இருந்தாலும் சரி, அவர்களது தன்னலமற்ற சேவையினையும் தளராத முயற்சியினையும் சங்கத்தின் நன்மைக்காக வழங்குவதேயாகும். எனவே, இந்நாட்டின் சகல பிரஜைகளும் கூட்டுறவுச் சங்கமொன்றில் அங்கத்துவம் பெற்று, அதன் மூலம் இந்நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களது பங்கினைச் செய்வார்களெனவே நான் பெரிதும் நம்புகிறேன்.

புதிய குடியரசுவின் அபிவிருத்தித் திட்டத்தினைச் செயற்படுத்துதலில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள முக்கிய பாகத்தினை நிறைவேற்றுதற்காய ஆற்றல் பொருந்திய திறமை மிக்கதும் வளம்பொருந்தியதுமான கூறுகளாக இக்கூட்டுறவுச் சங்கங்களைத் திகழச்செய்வதற்கு உங்கள் ஒத்துழைப்பினைக் கோருகின்ற இச்சமயத்தில், நீங்கள் யாபேரும், கூட்டுறவு மூலம் கூட்டுறவு முயற்சிமூலம், வெற்றியடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

## உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் மாண்புமிகு ரி. பி. இலங்கரத்ன

சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தினை, இன்றைய தினம் கொண்டாடுகின்ற கூட்டுறவாளர்களுக்கு, கூட்டுறவுக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சர் என்ற முறையில் என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதையிட்டு நான் பெரிதும் உவகையடைகிறேன்.

இந்நாடு, இப்போது முன்னேற்ற சகாப்தத்தின் நுழைவாயிலிலே இருக்கின்றது. பொருளாதார சதுப்பு நிலத்திற் கிடந்த இந்நாட்டினை, அதிலிருந்து மீட்பதற்குக் கடந்த இரண்டு வருட காலமாகக் கூட்டுறவாளர் என்ற முறையில், உங்கள் அயரா ஒத்துழைப்பினை நல்கியதற்காக, என் நன்றியினை உங்களுக்கு நான் முதலில் தெரிவித்தல் வேண்டும்.

கூட்டுறவு இயக்கம், சமுதாயத்தின் அடிநிலையிலுள்ள வகுப்பினருக்கும், பிறருக்கும் நேர்மையானதும், திறமையானதும், பட்சபாதமற்றதுமான சேவையளித்தற்கெனத் தன்னை அர்ப்பணித்துள்ளது, புதிய குடியரசின் கொள்கைக்கேற்ப, கூட்டுறவு இயக்கமானது, சிற்றூர்ப் பொருளாதார அபிவிருத்தி மூலம் நாடு முழுவதினதும், பொருளாதார, சமூக, கலாசார முன்னேற்றத்தினையே ஏற்படுத்துவதான, பொறுப்பு மிக்க பணி ஒப்படைக்கப்பெற்றதாய் திகழ்கின்றது. இத்தகைய முக்கிய பாகத்தினை, இக்கூட்டுறவு இயக்கமானது நன்கு நிறைவேற்றுவதற்கு அதற்கு உதவும் முகமாக 372 பெரியதும் பொருளாதார வளம் மிக்கதுமான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பெற்று, பெரும்பாலான பாவனைப் பொருட்களின் மொத்த விற்பனவு வியாபாரமும் அவற்றிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒரு விரிவான கடன் திட்டத்தினை இச்சங்கங்களின் மூலம் செயற்படுத்துதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதுடன், அதே சமயம், இச்சங்கங்கள், விவசாய மற்றும் பொருளாதார உற்பத்தித் திட்டங்களில் முழு மூச்சாகப் பங்கு பற்றுவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. பல

நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீள நிறுவப்பட்டது போலவே, புடவை, கடற்றொழிற் சங்கங்கள், கூட்டுறவுச் சம்மேளனம் தலைமைத் தரத்தினவான சங்கங்கள் ஆகியன மீள நிறுவப்பட உள்ளன.

நாட்டின் பொது நன்மைக்காய அரசுத் திட்டங்களைச் செயற்படுத்துதலில் கூட்டுறவு முறையினை விடச் சிறந்ததும் கூடிய பயனை விளைவிக்கக் கூடியதுமான முறை வேறில்லை. அரசாங்கத்தின் நோக்கங்களை எய்துதற்குக் கூட்டுறவாளர்களாகிய உங்கள் ஒவ்வொருவரினதும் இடையறு ஆதரவு முழுக்க முழுக்க இன்றியமையாததாகவே ஆகின்றது.

உங்களது ஒவ்வொரு முயற்சியிலும் கூட்டுறவின் விழுமிய இலட்சியங்களை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென நான் மனதார விரும்புகிறேன்.

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
## R. G. G. O. குணசேகரா

இன்று நாம் ஐம்பதாவது சர்வதேச கூட்டுறவுத்தினத்தினைக் கொண்டாடுகிறோம். உலகம் முழுவதுமுள்ள கூட்டுறவாளர்களுக்கு இஃது முக்கியத்துவம் மிக்கதும் மகிழ்வெய்தக் கூடியதுமான ஒரு தினமாகும்.

இலங்கையின் கூட்டுறவு இயக்கம், கடந்த அறுபது ஆண்டு காலத்தின்போது, உறுதியான வகையில் முன்னேற்றமடைந்துள்ளதுடன் அதன் எல்லைக்குள் வருவனவற்றைப் பொறுத்தவகையில், மக்களின், விசேடமாக, கிராமாந்திரப் பகுதியிலுள்ளவர்களின் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதிற் காலத்தாற் செய்யும் சேவையினை ஆற்றியுள்ளதென்பது பொதுவாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயற்படுத்துதலில், கூட்டுறவுத் துறையினைப் பொறுத்த வகையில் பாற்பண்ணை நடாத்தல் உட்பட விவசாயம், கடற்றொழில், சிறுகைத்தொழில்கள், வீடமைப்பு ஆகியவற்றில் முக்கிய பாகம் அளிக்கப்பட்டுள்ளது. சேவை செய்யும் நிறுவனங்களாக மாத்திரமே விளங்கிய கூட்டுறவுச் சங்கங்கள்

அபிவிருத்திக்காய கருவியாக ஆவதற்கு, கூட்டுறவுக் கருமங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் இவைபற்றிய தங்கள் மனப்பான்மையினை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதே இதன் அர்த்தமாகும். கூட்டுறவுத்துறையானது பொருளாதார அபிவிருத்திக்கு நியாயமான அளவு உதவியளித்து நாட்டின் பொருளாதார நலிவுகளைச்சிறிதளவேனும்தீர்க்க வேண்டுமாயின், இப்பணிகளை நிறைவேற்றுதற் பொருட்டுத் தோன்றவேண்டிய கூட்டுறவுத் தலைமையானது இப்புதிய தோற்றத்தினை அதன் எதிரே நிறுத்திவைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

கூட்டுறவுச்சங்கங்கள் மீள நிறுவப்பட்டு ஏறக்குறைய ஒரு வருடமாகின்றது. அங்கத்தவரிடையேயிருந்து தெரிவு செய்யப்படுகின்ற கிளை நிருவாகச்சபைகள் மூலம், இவ்வியக்கத்தில் மக்கள் மேன்மேலும் பங்குபற்றுதற்காய சந்தர்ப்பம் இப்போது அளிக்கப்பட்டு வருகின்றது. எங்கள் முன்னுள்ள பணிகளோ பலவாகும். எனவே பணிப்பாளர் சபையினுல் எடுக்கப்படும் ஒவ்வொரு தனித்தீர்மானமும், அக்கூட்டுறவுச் சங்கத்தின் எதிர்காலத்தில், அதன் விளைவுகளை உடையதாகவே இருக்கும். புதிதாக மீள நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வருகின்ற முதற்பணிப்பாளர் சபையானது முன்னேடியாக இருப்பதனுல் அதன் பொறுப்புக்கள் பெருமளவாகவே உள்ளன.

அகில உலகக் கூட்டுறவாளர்கள் மகிழ்வுறுகின்ற இத்தினத்திலே, கூட்டுறவுச் சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தவரிடமும் ஒவ்வொரு பணிப்பாளரிடமும், ஒவ்வொரு வேலையாளரிடமும் சொந்த நிறுவனமாகிய அக்கூட்டுறவுச் சங்கத்துக்கு அவரால் இயன்றவற்றைச் செய்து, அது வெற்றியீட்டும் வகையில் அவர் பொறுப்புடன் கடமையாற்றியுள்ளாரா என்று, அவர் தம் சொந்த இருதயத்தினையே கேட்குமாறு நான் மனதாரக் கோருகிறேன். எல்லோரது கூட்டுறவு முயற்சியின் மூலம் இப்புதிய இலங்கைக் குடியரசினை இனிமேல் தோற்றவிருக்கும் சந்ததியினருக்கு ஒரு சுவர்க்கமாகவே செய்துவிடுவோமென இன்றே உறுதியாகச் சங்கல்பம் செய்திடுவோம்.

நவீன முறையில்

# கடலட்டைத் தொழில் அபிவிருத்தி

ஸ்ரனிஸ்லாஸ்

ஏறத்தாள 75 வருடங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட கடலட்டைத் தொழிலானது இன்று அபிவிருத்தியடைந்து வருகின்றதென்பது யாவரும் அறிந்த உண்மையாகும். 'பழையன கழிந்து புதியன கொள்ளுதல்' என்ற கொள்கைக்கேற்பக் கடலட்டைத் தொழிலையும் நவீன முறையில் மேற்கொள்ளுவதற்கெனப் பல ஆராய்ச்சிகள் அண்மையில் நடைபெற்று வருகின்றன. இவ்வாராய்ச்சியானது புதுப் புதுக் கருத்துக்களைத் தொழிலாளரிடையே பரப்பவும், அவர்களது சிந்தனையைத் தூண்டவும் ஏதுவாக அமைந்துள்ளது. ஆகவே அண்மையில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கடலட்டைத் தொழிலை நவீன முறையில் செய்யும் வழிவகைகளைச் சுருக்கமாக ஆராய்வோம்.

## கடலட்டை உற்பத்தி

கடலட்டைத் தொழில் பழமைவாய்ந்ததெனினும் உற்பத்தி பற்றிய தரவுகள் 1962-ம் ஆண்டிலிருந்தே நமக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றன. அதற்கு முன்னர் உற்பத்தி விபரங்கள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக இல்லை. 1962 லிருந்து உற்பத்தி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

| | | |
|---|---|---|
| 1962 | — | 629 அந்தர் |
| 1963 | — | 403 ,, |
| 1964 | — | 982 ,, |
| 1965 | — | 2170 ,, |
| 1966 | — | 2298 ,, |
| 1967 | — | 1777 ,, |
| 1968 | — | 1192 ,, |
| 1969 | — | 2130 ,, |
| 1970 | — | 1885 ,, |
| 1971 | — | 2003 ,, |

மேற்காட்டிய தரவை ஆராயும்பொழுது பொதுவாக 200 அந்தர் தொடக்கம் 2300 அந்தர் வரை வருடா வருடம் கடலட்டை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றதென்பது புலனாகும். சில வருடங்களில் ஏற்பட்ட உற்பத்திக் குறைவு காலநிலை மாற்றங்களால் ஏற்பட்டிருக்கலாம். எனினும் எமது கடலட்டை உற்பத்தி அண்ணளவாக வருடம் 2000 அந்தராகும்.

கடலட்டை உற்பத்தி யினளவு இன்னும் அதிகரிக்குமா? அல்லது இதே நிலையில் நின்றுவிடுமா? அல்லது தொழிலாளர்கள் கூடிக் கொண்டு வருவதால் திடீர்க் குறைவு ஏற்படுமா? என்ற கேள்விகள் ஆராய்ச்சியாளரிடையே இன்று ஆராயப்படுவனவாகும். கடலட்டை உற்பத்தி இன்னும் பல வருடங்களுக்குத் தொடர்ந்து கூடிக் கொண்டு போகலாமெனவும், திடீரெனக் குறைவுபடக் கூடிய சாத்தியம் இப்போதைக்கில்லையெனவும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். எனினும் கடந்த ஏழு வருடங்களின் உற்பத்தி அண்ணளவாக வருடம் 2000 அந்தராக ஓரளவு நிலைத்து இருப்பதால் புதிய இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலன்றி, உற்பத்தி அதிகரிப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லையெனவும் ஒருசாரார் கருதுகின்றனர். நாம் சேர்க்கும் அட்டையின் தொகை உண்மையான உற்பத்தியைக் காட்டுவதில்லை என்பதையும், காலநிலை வேறுபாட்டால் உற்பத்தியாகும் அட்டைகளை நாம் முற்றுகச் சேகரிக்கும்வாய்ப்பு இல்லாதொழியலாமென்பதையும் நாம் இங்கு கருத்திற் கொள்ள வேண்டும். எனினும் நவீன சாதனங்களைப் பயன் படுத்துவதன் மூலம் உற்பத்தியைக் கூட்டலாமென்ற கருத்துப் பொதுவாக இன்று நிலவி வருகின்றது. எனவே இந்நவீன சாதனங்கள் எவையெனவும் அவை உற்பத்தியைக் கூட்டுமா எனவும் ஆராய்வோம்.

மரக்கலங்களை இயந்திரமயமாக்குவது உற்பத்தியை அதிகரிக்கலாமென நம்பப்படுகிறது. இன்று வெளியிணைப்பு இயந்திரங்கள் பூட்டிய கலங்கள் பல இத்தொழிலில் ஈடுபட்டுள்ளன. அத்துடன் இயந்திரப் படகுகள் சிறிய கலங்களை இழுத்துச் செல்லும் முறையும் கையாளப்பட்டு வருகிறது. இயந்திரமயமாக்கிய கலங்கள் உற்பத்தியை எவ்வாறு பெருக்குகின்றன? என்ற வினாவிற்கு விடையை ஆராய்வோம்.

முதலாவதாக, கடலட்டைத் தளங்கள் ஆழப் போகப் போகக் காணப்படுவதால், இயந்திரவள்ளங்கள் வெவ்வேறு தளங்களுக்கு விரைவில் செல்ல உதவுகின்றன. ஒரு தளத்தில் அட்டை இல்லாவிடின் வேறோர் தளத்தைத் தேடுவது மிக இலகுவாகின்றது. பண்டைக்காலத்தில்

இவ்வசதி இருக்கவில்லை. இவ்வாறு பல தளங்களை அடைய இயந்திரவள்ளங்கள் உதவுவது உற்பத்தியைக் கூட்டலாம். இரண்டாவதாக இத்தளங்களில் தொழிலாளர் சுழியோடியே அட்டையை எடுக்க வேண்டும். பண்டைக்காலத்தில் இத்தளங்களையடைய மரக்கோலால் தாண்டியே செல்லவேண்டும். எனவே தளத்தையடையும் போது தொழிலாளர் களைப்படைந்து விடுவார்கள். இவர்கள் பின்னர் சுழியோடினும் அதிக நேரம் அட்டைகளை எடுக்கமுடியாது. எனவே இயந்திரவள்ளங்கள் தொழிலாளர்களைக் களைப்பின்றி அட்டைத் தளங்களுக்கு எடுத்துச் செல்கின்றது. இதனுலும் உற்பத்தி கூடுகின்றதெனலாம். காரணம் எதுவாக இருப்பினும் தொழிலாளி இன்று இயந்திரக் கலங்களையே நாடுகின்ருன். இயந்திரப்படகிலும் பார்க்க வெளியிணைப்பு இயந்திரம் பூட்டிய பெரிய வள்ளத்தைத் தொழிலாளி பெரிதும் விரும்புகின்ருன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இயந்திரப் படகானது 3 தொடக்கம் 5 சிறிய வள்ளங்களை இழுத்துச் செல்வதால், சராசரி 30—50 தொழிலாளர் ஒரே தளத்தில் இறங்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனுல் போட்டி ஏற்படுவதுடன் சிலமணி நேரத்திலேயே தளம் வெறுமையாகிவிடலாம். இந்நிலையில் வேருேர் புதிய தளத்தைத் தேட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. வெளியிணைப்பு இயந்திரம் பூட்டிய வள்ளம் 10 பேருடன் ஒரு தளத்துக்குச் சென்ருல் அங்குள்ள அட்டைகள் அனைத்தையும் 10 பேர் மட்டுமே சேர்க்க வாய்ப்புண்டாகின்றது. இதனுல் தொழிலாளர் தனித் தனிக் கலங்களில் வெளியிணைப்பு இயந்திரம் பூட்டிச் செல்வதை விரும்புகின்றனர். ஆகவே கடற்றொழில் இலாகா அட்டைத் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் **போதியளவு வெளியிணைப்பு இயந்திரங்களை இறக்குமதி செய்து வழங்குவது மிக மிக அவசியமாகும்.** ஆனுல் கடந்த ஆண்டுகளில் இறக்குமதி செய்வதாகத் திட்டமிட்ட இயந்திரங்கள் இதுவரை வழங்கப்படாமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். காரணங்கள் எவையாக இருப்பினும் தொழில் அபிவிருத்தி செய்வதற்கு வேண்

டிய வெளியிணைப்பு இயந்திரங்கள் **வழங்கப்படாமை** கடற்ருெழில் அமைச்சின் திறமையின்மையை எடுத்துக் காட்டுவதாகும். வெளிநாட்டுச் செலாவணியைத் தேடித்தரும் இத்தொழிலை முன்னேற்ற இவ்வேற்பாடுகளைக் கடற்ருெழில் அமைச்சுக் காலதாமதமின்றிச் செய்ய வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்திக் கூறவேண்டும்.

சுழியோடிகள் **கண்ணுடி, சப்பாத்துக்களைப்** பாவிப்பதால் உற்பத்தியைக் கூட்டலாமென நம்பப்படுகிறது. கண்ணுடி பாவிப்பதால் கண் எரிவினின்றும் பாதுகாக்கப்படுவதுடன் தளத்திலுள்ள அட்டைகள் அண்மையில் காணப்படுவது போலும் தெரியவரும். சப்பாத்து அணிவதால் நீந்துதல் இலகுவாகின்றது. இவ்வுபகரணங்களை உபயோகிக்கும் தொழிலாளர் கூடிய தொகையான அட்டைகளைச் சேர்க்கிருர்களென்பது அநுபவம் காட்டும் உண்மையாகும்.

ஆனல் இங்கும் இவ்வுபகரணங்களின் தட்டுப்பாடு தொழில் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது. இவ்வுபகரணங்கள் இன்று உல்லாசப் பிரயாணிகளுக்குப் பயன்படுமுகமாகவே சிறிதளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இவ்வுபகரணங்கள் அட்டைத் தொழிலாளருக்குப் பயன்படும் வகையில் இறக்குமதி செய்யப்பட வேண்டியதவசியமாகும்.

சுழியோடிகள் **காற்றுமிதவைகளைப்** பயன்படுத்துவதால் உற்பத்தியைக் கூட்டலாமென இன்னுமோர் நம்பிக்கை நிலவுகின்றது. இன்று சில தொழிலாளர்கள் இவ்வுபகரணத்தைப் பாவிக்கின்ருர்கள். சாதாரண சுழியோடிகள் கடலுக்குள் 2–3 நிமிடங்களுக்கு மட்டுமே நிற்பார்கள். ஆனல் மேற்படி நவீன உபகரணத்தின் உதவியுடன் 30—45 நிமிடங்கள் கடலுக்குள் நிற்கலாமென அறியக் கிடக்கின்றது. 50 அடி ஆழம்வரை இவ்வுபகரணத்தைக் கொண்டு அட்டைகள் சேர்க்கலாமென அறியக் கிடக்கின்றது. இவ்வுபகரணம் கிட்டத் தட்ட ரூபா 4000 வரை கொள்விலையாகையால் சாதாரண தொழிலாளி இதைத்தன் வருமானத்தைக் கொண்டு வாங்க முடியாது கஷ்டப்படுகிருன். ஏற்றுமதியை ஊக்குவிக்கப் பிரயாசப்

படும் அரசாங்கம் இலவசமாக இவ்வுபகரணங்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க முன்வராமை ஆச்சரியத்துக்குரியதாகும். எனவே பரீட்சார்த்தமாக இன்று கடலட்டைத் தொழிலில் ஈடுபட்டுள்ள 21 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் **இலவசமாக இவ்வுபகரணங்களை வழங்கும் திட்டமொன்றைக் கூடிய கெதியில் அமைச்சு ஆக்கிச் செயலாற்றுவது வரவேற்கத் தக்கதாகும்.**

குஞ்சு அட்டைகளைச் சேகரிப்பது புத்தியாகுமா? என்ற கேள்விக்கும் நாம் உற்பத்தியடிப்படையில் விடை காணவேண்டும். குஞ்சு அட்டைகளை விட்டால் அவைவளர்ந்து முதிர்ச்சியடைவதுடன், வேறு அட்டைகளையும் உற்பத்தியாக்குமென்பது கடலட்டை ஆராய்ச்சியாளர் மத்தியில் நிலவும் கொள்கையாகும். ஆனால் அட்டைத் தொழில் செய்யும் தொழிலாளர், குஞ்சட்டைகளை விட்டால் வெகுவிரைவில் அழிந்து போகின்றன என்றும் அத்துடன் அவை அதிகம் முதிர்ச்சியடைவதில்லை என்ற நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். இவ்வாறு இவ்விடயத்தில் அனுபவமும் ஆராய்ச்சியும் மோதிக் கொள்ளுகின்றன. எது சரி எது பிழை என்ற முடிவுக்கு வர மேலும் ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியமாகும்.

எனினும் இவ்விருசாராரின் கொள்கைகளுக்கு ஆதாரமான சான்றுகளைச் சிறிது ஆராய்வோம். அட்டைகள் ஆழமான கடலில் இருந்து இனம் பெருக்குவதற்காகக் கரைநோக்கி வருகின்றன. கரையிலிருந்து விருத்தியடையும் குடம்பிகள் (Larvae) ஆழமான கடல் பகுதியை நோக்கிச் செல்கின்றன என்ற கருத்துக்களை அண்மையில் நடாத்திய கடலட்டை ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகின்றது. இதனடிப்படையில் விருத்தியடைந்துவரும் குடம்பிகளையே குஞ்சட்டைகள் என்றும், அவற்றைப் பொறுக்காது கடலிலேயே விட்டால் மேலும் விருத்தியடையுமெனவும் நம்பப்படுகிறது.

ஆனால் சிறிய அட்டைகள் கரையோரங்களில் மட்டுமல்ல ஆழமான இடங்களிலும் காணப்படுவதுண்டு. எனவே கடலட்டை விருத்திக்குச் சூழல் காரணிகளும் ஏதுவாக இருக்க

லாம். அத்துடன் மழை வெள்ளம் போடும் காலங்களில் சிறிய அட்டைகள் அழுகி அழிந்து போவதுண்டு என்ற நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுகிருர்கள். சிலசமயம் உப்புத்தன்மையின் செறிவு வேறுபாடு இவ்வித அழிவுக்குக் காரணமாகக் கூடுமோ எனவும் கொள்ள வேண்டியிருக்கின்றது. கடல் தளதாவரவருக்கமும் அட்டை விருத்தியைப் பாதிக்கலாம். இவற்றைவிட வெப்பநிலை, நீரோட்டம் ஆகிய ஏதுக்களும் அட்டை விருத்தியைப் பாதிக்கலாம். இவ்வகையான சிறிய அட்டைகள் அந்தர் 300—400 ரூபா வரை அந்நிய செலாவணியைச் சம்பாதிக்கக் கூடியது. எனவே இவற்றையும் சேகரிப்பதில் என்ன தீமையுண்டு என்று வாதாடுகின்றனர் தொழிலாளர்.

சீனு போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் அட்டைவளர்ப்பு முன்னேற்றமடைந்துள்ளதாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த சீனத் தூதுக்குழு தெரிவித்தமையையும் இங்கு ஆராய்வது அவசியமாகும். ஏரிக்கடற்கரைகளை அட்டை வளர்ப்புப் பண்ணைகளாக மாற்றலாமா என்பதை ஆராயவேண்டியது மிக அவசியமாகும். இத்துறையிலும் ஆராய்ச்சியை மேற்கொள்ள எமது பல்கலைக்கழகமும், கடற்ருெழில் ஆராய்ச்சிப் பகுதியும் முன்வரவேண்டும்.

**தொகுப்புரை:** இதுவரை கடலட்டை உற்பத்தியென்னும் தலையங்கத்தின்கீழ் ஆராயப்பட்ட கருத்துககளின் சுருக்கத்தை இங்கு தருவாம்.

(1) கடலட்டை வருட உற்பத்தி இன்று 2000 அந்தரெனவும், இதுபடிப்படியாக அடுத்த வருடங்களில் கூடக் கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு எனவும் ஆராய்ச்சி காட்டுகின்றது.

(2) கடலட்டை உற்பத்தியைக் கூட்டுவதற்கு மரக்கலங்கள் இயந்திரமயமாக்கப்படவேண்டும். போதிய வெளியிணைப்பு இயந்திரங்கள் கடலட்டைத் தொழிலாளிக்கு வழங்கப்படவேண்டும்.

(3) சுழியோடிகள் உபயோகிக்கும் கண்ணுடி, சப்பாத்துக்கள் போதியவை வழங்கப்பட வேண்டும். இறக்குமதி சாத்தியப்படாவிடில்

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

# அனைத்துலகக் கூட்டுறவுத்தினம்
# 1972
## பொது, பாடசாலை மாணவருக்கான போட்டிகள்

அனைத்துலகக் கூட்டுறவுத் தினத்தையொட்டி வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை கட்டுரை, கவிதை, சிறுகதை நாடகம் (எழுத்துப் பிரதி), சுலோகம் புனைதல் முதலிய போட்டிகளை நடாத்தவிருக்கின்றது.

இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் பாடசாலை மாணவர்களது விடயதானங்கள் அவர்களாலேயே எழுதப் பட்டன என்பதை அதிபர்/தலைமையாசிரியர் உறுதிப்படுத்த வேண்டும்.

பொது, பாடசாலை மாணவர்கள் ஆகிய இரு சாராரும் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடயதானங்களை அனுப்பி வைக்கலாம்.

### பொதுக் கட்டுரைப் போட்டி

கட்டுரைகள் 1200 சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

(1) உமது பகுதியிலுள்ள புதிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கம் எவ்வளவிற்கு மறுசீரமைப்பின் குறிக்கோள்களை எய்தி யுள்ளது.

### பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

#### சிரேஷ்ட பிரிவு

*(21 வயதுக்குக் குறையவும், 14 வயதிற்கு மேலும்)*

கட்டுரைகள் ஏறக்குறைய 700 சொற்கள் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

(1) உமது கருத்துப்படி கூட்டுறவு இயக்கத்திலே இளைஞர்கள் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த பங்கினை எவ்வாறு வகிக் கலாம்.

(2) உமது பகுதியிலேயுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வழிக ளில் சமூக அபிவிருத்திக்கு உதவுகின்றன.

(3) உமது பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் தனது உறுப்பினர் களின் தேவைகளை மேலும் பயன் முனைப்பான முறை களிலே நிறைவேற்றக் கூடிய வழிவகைகளை ஆராய்க.

**கனிஷ்ட பிரிவு** *(14 வயதிற்குக்கீழ்)*

கட்டுரைகள் ஏறக்குறைய 350 சொற்களில் எழுதப்பட வேண்டும்.

(1) உமது பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்தினை வர்ணிக்குக.

(2) உமது வீட்டுக் காய்கறித் தோட்டத்தை வர்ணிக்குக.

(3) உமது பாடசாலை எவ்வாறு உணவு உற்பத்தி இயக்கத்திற்கு உதவுகின்றது என்பதனை வர்ணிக்குக.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தாம் எழுதப்போகும் விடயதானங்களுக்கேற்ற கருத்துக்களை முன்பு வெளிவந்த கூட்டுறவுப் பத்திரிகைகளைப் படிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இவ்விதழ்களை யாழ்ப்பாணத்தில் 12, 14, காங்கேசன்துறை வீதியிலுள்ள வ. ஐ. மே. சபை செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நாடகம், சிறுகதை, கவிதை, சுலோகம் புனைதல் ஆகியன கூட்டுறவின் தத்துவத்தைக் கருப்பொருளாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

முதலிடம் பெறும் விடயதானங்கள் தகுதியானவை எனக் கருதப்பட்டால் அவற்றிற்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இப்போட்டி சம்பந்தமாக போட்டிக் குழுவின் முடிவே இறுதியானது.

**முடிவு திகதி: 31-8-72**

விடயதானங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்:
''கூட்டுறவு''
கூட்டுறவு இல்லம்,
வ. ஐ. மே. சபை,
12, 14, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

---

(14ம் பக்கத்தொடர்ச்சி)

இலங்கையில் இவற்றை உற்பத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(4) சுழியோடும் காற்று மிதவைகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

(5) கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் பரீட்சார்த்தமாக அமைக்கப்பட வேண்டும்.

(6) கடலட்டை ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறவேண்டும்.

(முற்றொடர்)

# கள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள்

22. பொதுக்கூட்டக் குறிப்புகள்

நிகழ்ச்சி நிரலின்படி ஒவ்வொரு விடயத்தைக் குறித்தும் ஆலோசனை செய்தபின்னர் நடவடிக்கைகளைச் சுருக்கமாக குறிப்புப்புத்தகத்தில் எழுதவேண்டும். அடுத்த விடயத்தை ஆலோசிக்குமுன்னர் குறிப்பைச் சபைக்கு வாசித்துக் காட்டி அதில் அக்கிராசனரும், காரியதரிசியும் கையொப்பமிட வேண்டும். ஒவ்வொரு பொதுக்கூட்டத்தினதும் குறிப்புக்கள் அதன் பின் கூடும் நிருவாகசபைக் கூட்டத்துக்கு சங்கக்காரியதரிசியால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

23. நிருவாகசபை

(1) சங்கக் கருமங்களை நடத்துவதற்கு ஒரு நிருவாகசபை வேண்டும். பொதுக்கூட்டம் தெரிவு செய்யலாகும் 21 வயதுக்கு மேற்பட்டவரும் சங்கத் தொழிற் பரப்பில் சாதாரணமாக கள்ளுச் சீவுந்தொழிலில் ஈடுபட்டுள்ளவருமாகிய சங்கத்தின் 9 அங்கத்தவர் நிருவாகசபையின் அங்கத்தவராவர். அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்துக்கு அடுத்து வரும் இரு பொதுக்கூட்டங்களிலும் நிருவாக சபையின் மூன்றிலொரு பங்கினர் முறையே பதவியினின்றும் விலகுவர். இவ்வாறு விலகவேண்டியவர் சீட்டு மூலம் தெரியப்படுவர். பாக்கி அங்கத்தவர் அடுத்துவரும் மூன்றும் பொதுக் கூட்டத்தில் விலகுவர். இவரின் இடத்தில் வேறுபேர் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர். எனினும், நிருவாகசபை அங்கத்தவர் எவரேனும் அடுத்து மூன்று வருடங்களுக்கு பதவியிலிருந்திருப்பின், அவரது முழுப் பதவிக்காலத் திகதியிலிருந்து குறைந்த பட்சம் ஒரு வருட காலத்துக்கேனும் நிருவாகசபை அங்கத்தவராக மீளவும் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியற்றவராவர் அல்லது நிருவாக சபை அங்கத்தவர்கள் தனிப்பட்ட முறையிலோ சபையா

கவோ தமது பதவிக் காலம் முழுவதும் முடியுமுன்னர் விலவார்களாயின் அவர் அல்லது அவர்கள் விலகிக்கொண்ட திகதியிலிருந்து குறைந்தபட்சம் ஒரு வருட காலத்துக்குத்தானும் மீளவும் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியற்றவராவர்.

தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவருடன் அடுத்த வருடாந்தப் பொதுக் கூட்டம்வரை நிருவாகசபையில் தொண்டாற்றுவதற்கு ஆணையாளர் 3க்கு மேற்பட்டாதவரை நியமிக்கலாம். இவ்வாறு நியமிக்கப்படுவோரும் நிருவாகசபையின் அங்கத்தவராவர். நியமனகாலம் முடியுமுன்னர் ஆணையாளர் எவரினதும் நியமனத்தை ரத்துசெய்யலாம்.

(11) இரு வருடாந்தக் கூட்டங்களுக்குமிடையில் நிருவாகசபையில் ஏற்படும் காலியிடங்களுக்கு நிருவாகசபை அங்கத்தவரைச் சேர்த்து அதை அடுத்த பொதுக்கூட்டத்தின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கவேண்டும். பொதுக் கூட்டம் நிருவாகசபையின் நியமனத்துக்கு உறுதியளிக்கலாம் அல்லது இன்னொருவரை அவ்விடத்தில் தெரிவு செய்யலாம். பொதுக்கூட்டத்தின் அனுமதியின்றி நிருவாக சபையால் சேர்க்கப்படுவோர் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்துக்குக் கடமையாற்றலாகாது.

(111) தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர் வருடாந்தக் கூட்டத்தில் முறைப்படி பதவியினின்றும் நீங்கவேண்டுமென்ற ஏற்பாடிருந்தபொழுதிலும் பொதுக்கூட்டம் தீர்மானத்தின் மூலம் அந்த நிருவாகசபையையே கலைத்துவிட்டு ஒரு புது நிருவாகசபையை நிறுவலாம். ஆனல் இதைப் பற்றிய பிரேரணை அங்கத்தவருக்கு அனுப்பப்படும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவேண்டியதுமன்றி கூட்டத்தைக் குறித்து 7 நாள் அறிவித்தலும் கொடுக்கப்படல் வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் புது நிருவாகசபை முன்கூறிய பிரகாரம் முறைப்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பதவியினின்றும் விலகவேண்டும்.

## 24. நிருவாகசபையில் அங்கத்துவம் பெறத் தகுதியற்றவர்

(1) பின்வருவோர் நிருவாகசபைக்குத் தெரிவு பெறும் தகுதியுடைமையற்றவர்:-

(அ) அங்கத்தவரல்லாதவர்.

(ஆ) முந்தின மூன்று ஆண்டுகளில் ஒழுக்கச் சீர்கேடு சம்பந்தமான குற்றச்சாட்டில் குற்றவாளியாக்கப்பட்டவர் அல்லது 3 மாதகாலத்துக்கு மேற்பட்ட மறியல் தண்டனைக் குட்பட்டவர்.

(இ) இச்சங்கத்தையொத்த அதிகாரங்களை உடைய இன்னொரு சங்கத்தின் நிருவாகசபையைச் சேர்ந்தவர்.

(ஈ) கடனிறுக்க இயலாமைகோரி விண்ணப்பஞ் செய்தவர் அல்லது அவ்வாறு தீர்ப்புப் பெற்றவர்.

(உ) வியாபாரியாகவோ வட்டிக்குப் பணம் கொடுப்பவராகவோ, தொழில் ஒப்பந்தக்காரராகவோ இருப்பவர் அல்லது பொதுக் கூட்டம் சங்கத்தின் நலனுக்கெதிரிடையானதென்று எண்ணும் முறையில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ வேறெந்த முயற்சியிலும் ஈடுபட்டவர்.

(ஊ) ஆணையாளரின் முன் அங்கீகாரமின்றி சங்கத்தில் உத்தியோகம் அல்லது இலாபம் தரும் பதவி அல்லது தகைமைக் கொடை பெறுபவர்.

(எ) இச்சங்கத்தில் அல்லது இச்சங்கம் அங்கத்துவம் பெற்ற வேறுசங்கத்தில் சம்பளம் பெறும் பணியாளராயிருப்பவர்.

(ஏ) 21 வயதுக்குட்பட்டவர்.

(ஐ) சங்கத்திடம் பெற்ற கடனைத் தீர்ப்பதில் 3 மாதத்திற்குமேல் தவறியவர் அல்லது வேறெந்தவிதத்திலும் இச்சங்கத்திற்கு அல்லது வேறு கூட்டுறவுச் சங்கத்துக்குக் கடமையில் தவறியவர்.

(ஒ) அங்கத்தவரென்ற முறையிலன்றி எவ்வாறுயினும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சங்கத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் அல்லது சங்கம் செய்த விற்பனையில் அல்லது கொள்வனவில் அல்லது நடைமுறையிலிருக்கும் அல்லது பேச்சிலிருக்கும் சங்கப் பணத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கலில் கரிசனையுடையவராயிருப்பவர்.

(2) ஆணையாளரின் நியமனம் பெற்றவரையொழிந்த ஏனையவர் பின்வரும் நியாயங்களால் உடனே நிருவாகசபை அங்கத்துவத்தை இழப்பர்.

(அ) 1 ஆம் உட்பிரிவின்கீழ் நிருவாகசபை அங்கத்துவம் பெறத் தகுதியற்றவர்.

(ஆ) போதிய நியாயமின்றி அடுத்து மூன்று நிருவாகசபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறியமையால் பதவியினின்றும் விலகிவிட்டாரென நிருவாகசபை தீர்மானம் செய்தல்.

(இ) எழுத்தில் ஒருமாத அறிவித்தல் கொடுத்து விலகல்.

(ஈ) பொதுக் கூட்டத்தால் அல்லது ஆணையாளரால் நிருவாகசபையினின்று நீக்கப்படுதல்.

(3) ஆணையாளரின் நியமனம் பெற்றவர் ஆணையாளர் நியமனத்தை ரத்து செய்யும் பொழுது அல்லது நியமனகாலம் முடியும் பொழுது நிருவாகசபைப் பதவியை இழப்பர்.

(4) கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் நிருவாகசபையிலிருந்து அல்லது வேறு உத்தியோகம் அல்லது வேலையிலிருந்து ஆணையாள

ரால் நீக்கப்படுபவர் நிருவாக சபைக்கு அல்லது வேலைக்கு மீண்டும் நியமிக்கப்படலாகாது.

25. நிருவாகசபைக் கூட்டங்கள்

நிருவாக சபைக்கூட்டங்கள் வேண்டிய வேளைகளிலும் குறைந்தபட்சம் மாதமொருமுறையும் கூடவேண்டும். எவ்விடயத்தையும் ஆலோசிப்பதற்கு அரைவாசிப்பேருக்கு மேற்பட்டவர் சமுகமளிக்கவேண்டும். தலைவர் அல்லது உபதலைவர் அல்லது இருவருமில்லாதவிடத்து சமூகமளிப்பவரால் தெரிவு செய்யப்படுபவர் அக்கிராசனம் வகிப்பர். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமையுண்டு. தலைவருக்கு இரண்டாம் அல்லது முடிவு செய்வாக்கு மேலதிகமாகவுண்டு. தலைவர், நிருவாகசபை, ஆணையாளர் அல்லது பரிசோதகர் அல்லது நிருவாகசபையின் அரைவாசிக்கு மேற்பட்டவர் எழுத்து மூலம் செய்யும் வேண்டுகோளின்படி காரியதரிசி அழைக்கும்போது அல்லது தலைவர், நிருவாக சபை, ஆணையாளர் அழைக்கும்போது நிருவாகசபை கூடவேண்டும். நிருவாகசபை அங்கத்தவரிடையே காணப்படும் ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது நிருவாகசபை அங்கத்தவர் யாரேனும் ஒருவரது நியமிப்பில் அல்லது தெரிவில் காணப்படும் ஏதேனும் குறைகாரணமாக மாத்திரம் நிருவாகசபையின் ஏதேனும் கருமம் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடியற்றதாகா.

26. நிருவாகசபைக் கூட்ட வரலாறுகள்.

நிருவாகசபைக் கூட்டங்களில் ஆலோசிக்கப்படும் அல்லது தீர்மானிக்கப்படும் விடயங்கள் யாவும் ஒரு குறிப்புப்புத்தகத்தில் எழுதப்பட்டு கூட்ட அக்கிராசனராலும் சமுகமளிக்கும் ஏனைய அங்கத்தவராலும் கூட்ட முடிவில் கையொப்பமிடப்படல் வேண்டும்.

27. நிருவாகசபையின் பணிகள்

(1) பொதுக்கூட்டத்துக்கென ஒதுக்கப்பட்டனவற்றையொழிந்த சங்கத்தின் ஏனைய அதிகாரங்கள் நிருவாகசபைக்கு உரியனவாகும்.

(ii) சட்டம், இவ்வுபவிதிகள் பொதுச் சபையின் தீர்மானங்கள் ஆகியன விதிக்கலாகும் கட்டுப்பாடுகளுக்கமைவாக, நிருவாகசபை பின்வரும் பணிகளை ஆற்றுதல் வேண்டும்:

(1) சங்கத்தின் தலைவரையும் உபதலைவரையும் தங்களுள் தெரிவு செய்தல்.

(2) நிருவாகசபையில் ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதற்கு அங்கத்தவர்களை உடன் சேர்த்தல். இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட நிருவாக அங்கத்தவர் பொதுச்சபையின் அடுத்த கூட்டம்வரை பதவியிலிருக்கலாம்.

(3) சங்கத்தின் வேலைகளுக்குத் தேவைப்படும் நிதியினைப் பெறுவதற்காய நியதிகளை, நிபந்தனைகளை வழிவகைகளை சபை விதிக்கும் உச்ச வரம்புக்கு அமைவாக நிர்ணயித்தல்.

(4) அதற்கென ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்கீழ், வேலைநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, சம்பளம் என்பவை சம்பந்தமாக அத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, முகாமையாளர் ஒருவரினதும் ஏனைய ஆளணியினதும் சேவையினைப் பெறுதல்.

(5) பொதுச்சபையின் முன் அங்கீகாரத்துடன், சங்கத்துக்குத் தேவைப்படுகின்ற நிலையான சொத்துக்களை, கொள்வனவு செய்வதன் மூலமோ வேறு வகையாகவோ பெற்றுக்கொள்ளல்.

(6) பொதுச்சபையினதும் ஆணையாளரினதும் முன் அங்கீகாரத்துடன் சங்கத்தின் நிலையான சொத்துக்கள் எவற்றையேனும் விற்றல்.

(7) பங்குகளை ஒதுக்கல், பங்கு மாற்றத்துக்கு அனுமதியளித்தல், வேறு வியாபார நிறுவகங்களில், சங்கத்தின் சார்பாக பங்குகளை வாங்குதல்.

(8) நிலத்தையும் கட்டடங்களையும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுதல் அல்லது எடுத்தல்.

(9) அங்கத்தவர்களுக்கு கள்ளுச் சீவுவதற்கு மரங்களை ஒழுங்கு செய்து, அவர்களிடையே அவற்றைப் பங்கிடல்.

(10) கடன்கள் வழங்குவதற்காய திட்டங்களை வரைதல்.

(11) அங்கத்தவர்களின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் அவற்றைப் பாவனையாளருக்கு விற்பதற்குமாய நியதிகளைத் தீர்மானித்தலும், அதற்காய ஒழுங்குகளைச் செய்தலும்.

(12) சங்கத்தின் வேலையாளர் அல்லது உத்தியோகத்தர் ஒருவர் மூலம் சட்ட நடவ[illegible]களை எடுத்தல், நடாத்[illegible]ல் எதிர்வாதஞ் செய்தல் [illegible], மேவுதல் அல்லது கைவிடுதல்.

(13) சங்கத்தின் நோக்கங்களை எய்துவதற்கு அவசியமெனப்படும் அத்தகைய சிற்சபைகளை நியமித்தல்.

28. நிருவாகசபையின் கடமைகள்

பின்வருவன நிருவாக சபையின் கடமைகளாகும்:—

(அ) வேண்டிய வேளைகளில் பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டத்தினையும் அச்சபையின் ஏனைய கூட்டங்களையும் அழைத்தல்.

(ஆ) சங்கத்தின் சகல கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான பதிவுகளைப் பேணுதற்கும், சகல சொத்துக்களினதும் செல்பொருட்களினதும் கணக்குகளை வைத்திருப்பதற்கும் ஒழுங்கு செய்தலும், ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பெற்ற ஒருவரால் எண்பார்வையிடப்பட்ட கணக்கு விபரங்களையும் ஐந்தொகையினையும் பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டத்தின்போது சமர்ப்பித்தலும்; முந்திய வருடத்தின் எண்பார்வையாளர் அறிக்கையும் கணக்கு விபரமும் பெறமுடியாதவிடத்து உபவிதி 20 (11) இன் பிரகா

ரம் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும்.

(இ) எதிர்வரும் நிதியாண்டு சம்பந்தமாக ஆலோசிக்கப் பட்டுள்ள சங்கக் கருமங்கள் பற்றிய வரவு செலவுத் திட்டத்தினை அல்லது மதிப்பிடப் பட்டுள்ள வருமானத்தையும் செலவினைத்தையும் பற்றிய கூற்றினை நிதியாண்டு ஆரம்பமாவதற்குக் குறைந்த பட்சம் இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே பொதுச்சபையின் கூட்டமொன்றின்போது, சமர்ப்பித்தல்.

(ஈ) புதிதாக ஆரம்பித்த ஏதேனும் கருமம் சம்பந்தமாக, அதன் செயற்படு தன்மை பற்றிய அறிக்கைகளைப் பெற்று, அக்கருமந் தொடர்பாக செலவுகள் செய்வதற்கு முன்னர் அவற்றை மதிப்பீடு செய்தல்.

(உ) ஒவ்வொரு மாதமும் சங்கத்தின் கருமங்கள் சம்பந்தமான தேர்ச்சி அறிக்கைகளையும், நிருவாக சபையினால் நிர்ணயிக்கப்படும் காலங்களுக்காய மற்றும் விசேட அறிக்கைகளையும், வரவு செலவுத் திட்டங்களுடனும் இலக்குகளுடனும் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்தற்பொருட்டு முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலும் அவைகளுக்குப் பொருத்தமாக பணிப்புரைகளை முகாமையாளருக்கு வழங்கலும்.

(ஊ) பொதுக்கூட்டத்தின் அங்கீகாரத்துக்கமைவாக பின்வருவன சம்பந்தப்பட்ட வகையில் நடைமுறை விதிகளையும், நடைமுறை விதிகளையும் வரைதல்.

(i) மூலதனத்தையும் நிதியையும் திரட்டலும், பயன்படுத்தலும்.

(ii) பெறுக்கொள்ளக் கூடியகள்ளு, விலை வீச்சுக்கள், கொடுப்பனவுகள்.

(iii) பணியாளர் ஆட்சேர்ப்பு, சம்பளங்கள், பயிற்சி, பதவியுயர்வு, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு

(iv) சமுதாயத்தில் சங்கம் ஏற்றுள்ள பாகம், சங்கம் அங்கத்தவர்களுடனும் பொது சனத்துடனும் கொண்டுள்ள தொடர்பு.

(v) விற்கும் விலைகளையும் விற்பனை நியதிகளையும் குறித்தல்.

(vi) கல்வி, கலாசார, பொழுதுபோக்கு, சமுகசேவை சம்பந்தமான கருமங்கள்

(vii) உபவிதி 42 (2) இன் பிரகாரம் ஆரம்பித்த நிதிகளைச் செயற்படுத்தல்.

(எ) சங்கத்தினைச் சுமுகமாக இயங்கச் செய்தல், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தையும் இவ்வுபவிதிகளையும் கையாளுவதுடன் அவற்றின் ஏற்பாடுகளையும் சயற்படுத்தல், சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு அல்லது யாரேனும் தனிப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அல்லது பொதுச்சபைக்கு குறிப்பாக ஒதுக்கப்பட்டோ விபரிக்கப்பட்டோ இல்லாமலும், சங்கத்தின் நோக்கங்களை எய்துவதற்கு அவசியமானவையல்லது அனுகூலமானவைாகயாக அமைந்துள்ளதுமான

இதர கருமங்கள் யாவற்றை யுஞ் செய்தல்.

29. நிருவாகசபை அங்கத்தவரின் பொறுப்புக்கள்

நிருவாகசபையின் அங்கத்தவர்கள் தமது பணிகளையும் கடமைகளையும் ஊக்கத்துடன் செய்வதுடன் சட்டத்துக்கும் இவ்வுபவிதிகளுக்கும் ஏற்ப, அவற்றைச் செய்தல் வேண்டும். அத்துடன் நிருவாகசபையானது, ஊக்கங்காட்டத் தவறியதன் விளைவாக அல்லது இச்சட்டத்தையும் இவ்வுபவிதியையுங் கையாளத் தவறியதன் விளைவாக, சங்கத்தினால்செலுத்தப் படவேண்டியதாயுள்ள ஏதேனும் தண்டத்துக்கு அல்லது ஏற்படும் ஏதேனும் ஊறுபாட்டுக்கு அல்லது நட்டத்துக்கு நிருவாக சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாகவேண்டும்.

30. தலைவரும் உபதலைவரும்

(1) நிருவாகசபை தனது அங்கத்தவரினின்றும்சங்கத்தினது தலைவரையும் உப தலைவரையும் தெரிவு செய்யவேண்டும். இவர்கள், எதிர்வரும் வருடத்துக்காய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படும் வரை அல்லதுஆணையாளரால் அல்லது நிருவாகசபை அங்கத்தவரால் அவர்கள் இப்பதவியிலிருந்தும் நீக்கப்படுவதன் காரணமாக தமது பதவியை இழக்கும்வரை அல்லது இவ்வுபவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் தகுதியின்மை காரணமாக நிருவாகசபை அங்கத்துவத்தை இழக்கும் வரை அல்லது காரியதரிசிக்கு ஒரு மாத எழுத்துமூலம் அறிவித்தல் கொடுத்து விலகும் வரை கடமையாற்றுவர்.

(2) மேற்தரப்பட்ட ஏற்பாடு எங்ஙனமாயிருப்பினும் ஆணையாளர் எப்போது வேண்டுமாயினும், சங்கத்தின் தலைவரை அல்லது உபதலைவரை அல்லது இருவரையுமே நியமிக்கலாம். எனவே, இதன் காரணமாக நிருவாகசபையினால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அல்லது உபதலைவர் எவராயினும் அத்தகைய பணி நீங்கப்பெற்றவராகத் தனது பதவியினை விட்டு விலகியவராவர்.

31. (1) தலைவர், நிருவாக சபை அங்கத்தவரின் தலைவராக இருப்பதுடன், அவர் சமுகமளித்திருப்பின், நிருவாக சபையினதும் பொதுச் சபையினதும் கூட்டங்களுக்கும் தலைமைவகிக்கலாம். முகாமையாளரினதும் சங்கத்தின் ஏனைய பணியாளரினதும் வேலையினை மேற்பார்வை செய்வதற்குத் தலைவருக்கு அதிகாரமுண்டு. இவ்வுபவிதிகளைக் கையாளுதல்பற்றியும் பொதுச்சபையினதும் நிருவாகசபையினதும் கூட்டங்களினது தீர்மானங்கள் திறமையாகச் செயற்படுத்துதல் பற்றியும் தலைவர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(வளரும்)

# மறுசீரமைக்கப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதிகள்

**கிளைகள்**

8. தற்காலிக பணியாளர் சபை தனது நியமனத்தின் பின், கூடிய கெதியில் எந்தெந்தப் பகுதியில் கிளைப் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, கிளைக்குழுக்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டும் என்பதைக் குறித்தல் வேண்டும். அப்படியான ஒவ்வொரு பகுதிக்கும் உறுப்பினர்க்குரிய ஒரு கிளைப் பதிவேடு தொடக்கப்பட்டு நடத்தப்படவேண்டும். உறுப்பினர்க்குரிய ஒரு கிளைப் பதிவேட்டில் பெயர் காணப்படும் உறுப்பினர் களைக்கொண்டே இந்தச் சங்கத்தின் ஒரு கிளையை அமைப்பர். இந்தச் சங்கத்தின் ஒவ்வொரு கிளைக்கும் ஓர் அலுவலகம் உண்டு. அது இச்சங்கத்தின் கிளை அலுவலகம் என்று அழைக்கப்படும். பணிப்பாளர் சபையால் ஒரு கிளைக்குரிய முகாமையாளர் நியமிக்கப்படுவார். காலத்துக்குக்காலம் கிளைகளின் எண்ணிக்கையைக் கூட்டிக்குறைக்க பணியாளர் சபைக்கு அதிகாரமுண்டு.

**உறுப்பினராகச் சேரும் முறை**

9. (1) உறுப்பினராகும் தகுதியுடைய எவராவது உறுப்பினராவதற்கு இந்தச் சங்கத்தின் எந்தக் கிளையின் கௌரவ செயலாளருக்கோ அல்லது முகாமையாளருக்கோ விண்ணப்பித்தால் அவர் குறைந்தது ஒரு முழுப்பங்கின் பெறுமதியைக் கொடுத்தபின்போ அல்லது ஒரு பங்கின் முதல் தவணைக் கட்டணத்தைக் கொடுத்தபின்போ அந்தக் கிளைக் குழுவின் ஓர் உறுப்பினராகச் சேர்க்கப்படலாம்.

(ஆ) எந்தவொரு பதிவுபெற்ற பலநோக்குக் கூட்டுறவு சங்கமும் குறைந்தது ஒரு பங்கினதேனும் முழுப் பெறுமதியைக் கொடுத்தபின்பு குறிக்கப்பட்ட / பத்திரத்தில் விண்ணப்பித்தால் அது ஓர் உறுப்பினராகச் சேர்க்கப்படலாம்.

(2) 1 (அ) பகுதியின் கீழ்வரும் ஒவ்வொரு விண்ணப்பமும் இணைப்பிரதி கொண்டதாகவும், விண்ணப்பகாரரால் கையொப்பமிடப்பட்டதாயும் குறித்த பத்திரத்தில் உள்ளதாயும் இருத்தல் வேண்டும். இந்த விண்ணப்பங்களின் மூலப்பிரதி இச்சங்கத்தின் எந்தக் கிளை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதோ அங்கு பதிவுச் சுவடிக்காக கட்டி வைக்கப்படவேண்டும். இவற்றின் இணைப்பிரதி அந்தந்தக்

கிளையின் கௌரவ செயலாளர் அல்லது முகாமையாளரால் தலைமை அலுவலகத்துக்கு / பதிவுச்சுவடிக்கு கட்டி வைக்கப்படுதற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(3) இச்சங்கத்தின் ஒரு கிளையினுடைய கௌரவ செயலாளர் தன்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட உறுப்புரிமை கோரும் விண்ணப்பங்களை அந்தக் கிளைக்குழுவின் அடுத்துவரும் கூட்டத்திலேயே சமர்ப்பிப்பது அவரவர்களின் கடமையாகும். உறுப்பினராகச் சேர்வதற்குரிய தகுதிகள் இல்லாத எவருடைய விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் கிளைக்குழுவுக்கு உண்டு. அப்படி நிராகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரகாலத்துக்குள் குறித்த விண்ணப்பகாரருக்குப் பதிவுத் தபால்மூலம் அதனை அறிவிக்கவேண்டும்.

9. (4) கிளைக்குழுவினால் உறுப்புரிமை கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட ஒருவர், அதற்கெதிராக இச்சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். அப்படியானதொரு மேன்முறையீடு இச்சங்கத்தின் செயலாளருக்கோ அல்லது முகாமையாளருக்கோ பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும். அப்படியான மேன்முறையீட்டினைப் பணிப்பாளர் சபை தனது அடுத்த கூட்டத்தில் தீர்மானித்துக்கொள்ளும் ஒருவரின் மேன்முறையீடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பணிப்பாளர் சபையின் கூட்டத் திகதி அவருக்கு பதிவுத்தபால்மூலம் இச்சங்கத்தின் செயலாளராலோ அல்லதுமுகாமையாளராலோ அறிவிக்கப்படும். பணிப்பாளர் சபைக்குப் பிரச்சினைகளை எடுத்துச்சொல்ல ஒவ்வொரு விண்ணப்பகாரருக்கும் உரிமையுண்டு. பணிப்பாளர் சபையின் தீர்மானமே முடிவானது.

(5) இச்சங்கத்தின் எந்தவொரு கிளைக்கும் அதற்குரிய கிளைக்குழு தெரிந்தெடுக்கும் வரை அந்தக் கிளைக்கு உறுப்புரிமை கோரி விண்ணப்பிப்பவர்களைச் சேகரிக்கும் அதிகாரம் தற்காலிக பணிப்பாளர் சபைக்கு உண்டு.

(6) பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கமொன்றின் உறுப்புரிமைக்கான விண்ணப்பம் இச்சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பதிவுச் சுவடிக்காக வைக்கப்படும்.

### உறுப்பினரின் பதிவேடு

10. (1) (அ) எந்தக்கிளை அலுவலகத்திலும் உறுப்புரிமை கோரும் விண்ணப்பங்கள் தொடர் இலக்கமிடப்பட்டு, பதிவுச் சுவடியாக வைக்கப்படும். இது அந்தக் கிளையினுடைய உறுப்பினரின்பதிவேடாகும். உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு இலக்கம் வழங்கப்படும். அந்த இலக்கம் அவர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ள கிளையின் இலக்கத்தையும், அவரின் உறுப்புரிமைக்கு வழங்கிய இலக்கத்தையும் குறிக்கும், (உதாரணமாக 2/13 என்ற இலக்கத்தில் 2 கிளையின் இலக்கத்தையும், 13 அந்தக் கிளையின் உறுப்புரிமை இலக்கத்தையும் குறிக்கும்)

(ஆ) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்று உறுப்பினராகச் சேர்வதற்குப் பணியாளர் சபைக்கு விண்ணப்பிக்க வேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றின் விண்ணப்பத்தை பணியாளர் சபை நிராகரிக்குமாஞல் அதனை பொதுச்சபையின் தீர்மானத்துக்கு விடவேண்டும். இந்த விடயத்தில் பொதுச்சபை எடுக்கும் தீர்மானம் முடிவானது.

(2) இச்சங்கத்தின் பதிவுக்கான விண்ணப்பத்தில் கையொப்பம்இட்ட ஒவ்வொருவரும் 6(இ) உபவிதியின்படி இச்சங்கத்தின் உறுப்பினராகக் கருதப்படும் ஒவ்வொருவரும் கூடியகெதியில், உறுப்பினராகச் சேர்வதற்கு நிரப்பவேண்டிய அதேமாதிரி விண்ணப்பப் பத்திரத்தின் இரண்டு பிரதியை எந்தக்கிளை அலுவலகத்திலாவது நிரப்பிக்கொடுத்தல் வேண்டும். அப்படியான ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு இலக்கம் வழங்கப்படும். அந்த இலக்கம் அவர் உறுப்பினராகக் கருதப்படும் கிளையின் இலக்கத்தையும் அவருக்கு வழங்கிய உறுப்புரிமை இலக்கத்தையும் குறிக்கும். அப்படியான எவரும் உறுப்புரிமை பெறுவதற்காக ஒரு பங்கிற்கு மேலாக வைத்திருக்கவேண்டியதில்லை.

10. (3) இச்சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் தொடர்பிலக்கமிடப்பட்டு, பதிவுச் சுவடிக்காக வைக்கப்பட்டு, உறுப்பினரின் விண்ணப்பப் பத்திரங்களின் இணைப்பிரதிகள் சேர்ந்து உறுப்பினரின் ஒரு இணைப்பிரதிப் பதிவேடாக அமையும்.

(4) இச்சங்கத்தின் எந்தவொரு கிளையிலுள்ள உறுப்பினரின் பதிவேட்டிலாவது ஒருவருடைய பெயர் பதியப்பட்டிருந்தால் அவர் வேருெரு கிளையில் உள்ள உறுப்பினர் பதிவேட்டில் தன்னை உறுப்பினராகப் பதிந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்.

(5) கிளைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தெரிந்தெடுக்கத் தேர்தல் நடக்கும் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்கு முன்பே இச்சங்கத்தின் எல்லாக் கிளைகளினதும் உறுப்பினரின் பதிவேடுகளும் மூடப்பட்டுவிடும்.

### உறுப்பினர்களின் உரிமைகளும் கடமைகளும்

11. (அ) இந்த உப-விதிகளில் கூறப்பட்டிருக்கும் உரிமைகள், கடமைகள், கட்டுப்பாடுகள் எல்லா உறுப்பினருக்கும் உண்டு. இப்போது நடைமுறையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருத்தமான விதிகள் இவர்கட்கும் பொருந்தும். ஆஞல், 10(2) 'ஈ' உப-விதியின்படி பதிவுச்சுவடியில் வைப்பதற்காக விண்ணப்பப் பத்திரத்தைக் கொடுக்கத் தவறிய உறுப்பினரோ அல்லது 9 (1)ஆம் உப-விதியின்படி கொடுக்கப்பட்ட விண்ணப்பம் அதற்குரிய கிளைக் குழுவிஞல் 9 (3) உப-விதியின்படி நிராகரிக்கப்பட்ட உறுப்பினரோ:-

(1) எந்தக் கிளையின் உறுப்பினர் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கோ,

(2) வாக்களிப்பதற்கோ,

(3) எந்தக் கிளைக்குழு அல்லது சங்கத்தின் பொதுச் சபை அல்லது பணியாளர் சபைஎதற்கும்தெரிந்தெடுக்கப்படுவதற்கோ உரிமையுடையவராகமாட்டார்.

(ஆ)உறுப்பினராக உள்ள பதிவுபெற்றபலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இச்சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்கு ஒரு பிரதிநிதியை அனுப்ப உரிமையுண்டு. அப்படியான பிரதிநிதிகள் 52(இ) உப-விதியின்படி கூட்டங்களில் பங்குபற்றி வாக்களிக்கவோ,பணிப்பாளர்சபைக்கு நியமிக்கப்படவோ உரிமையுடையவர்களாவர்.

உறுப்பினர்களை விலக்கல்

12. நிலைய உறுப்பினர் ஒருவரைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினர் எவராவது இந்த உப-விதிகளை மீறினல் அதற்குரிய காரணத்தை ஏழுநாட்களுக்குள் காட்டுமாறும், அவரை ஏன் பணிப்பாளர் சபைக்கு நடவடிக்கைக்காக அறிவிக்கக்கூடாதென்பதற்கு விளக்கம் காட்டுமாறும் கேட்க அந்தக் கிளைக் குழுவிற்கு அதிகாரமுண்டு. தகுந்த காரணங்கள் காட்டவில்லையென்று அதன் கிளைக்குழு கருதினல், அந்த உறுப்பினர் பற்றியும், அதன் விளக்கம் பற்றியும், ஏன் அந்த விளக்கம் திருப்திகரமாக இல்லை என்பது பற்றியும் ஒரு அறிக்கை தயாரித்து பணிப்பாளர் சபைக்கு அதைக் கிளைக்குழு அனுப்பவேண்டும்.

அதன்பின் பணிப்பாளர்சபை தேவையான விசாரணைகளை நடாத்திவிட்டு அந்த விடயத்தை அடுத்த பொதுச்சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டும். கூட்டத்துக்கு வர உரிமை பெற்ற மொத்த பிரதிநிதிகளின் தொகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அந்த உறுப்பினரை விலக்குதற்குப் பொதுச் சபைக்குஅதிகாரம் உண்டு.

உறுப்புரிமை முடிவுபெறுதல்

13. கீழ்வரும் சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்தால் உறுப்புரிமை முடிவு பெறும்;—

(அ) இறப்பு
(ஆ) மூளைக்கோளாறுடையவராக உறுதிப்படுத்தப்பட்டால்.
(இ) இச்சங்கத்திற்கு எழுத்து மூலம் ஒரு மாத கால முன்னறிவித்தல் கொடுத்தபின்பு விலகினல்.
(ஈ) குறைந்தது ஒரு பங்கேனும் வைத்திருக்காவிட்டால்.
(உ) உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டால்.
(ஊ) விலக்கப்பட்டால்.
(எ) உறுப்புரிமைக்குரிய தகுதியினை இழந்தால்.
(ஏ) ஓர் உறுப்புச் சங்கத்தின் பதிவு இரத்துச் செய்யப்பட்டால்.

நியமனம்

14. ஒவ்வொரு உறுப்பினரும் ஒருவரையோ அல்லது கூடவோ நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு:—

(1) அந்த உறுப்பினர் காலமானல் அவருடைய பங்குகளும், மற்றும் உடமைகளும் மாற்றப்படும். ஒரு பங்கிற்குக் கூட வைத்திருந்தாலொழிய

ஓர் உறுப்பினர் ஒருவருக்கு மேல் நியமிக்க முடியாது. ஓர் உறுப்பினர் ஒருவருக்குமேல் நியமனம் செய்யுமிடத்து, தனது பங்குகளும் மற்றும் உடமைகளும் என்ன விகிதாசாரப்படி தன்னால் நியமிக்கப் படுபவர்களுக்கிடையில் பங்கிடப்படவேண்டும் என்பதையும் குறிப்பிடல் வேண்டும். எந்த நேரத்திலும் தான் செய்த ஒரு நியமனத்தைநீக்கி வேறொரு புது நியமனத்தைச் செய்ய ஓர் உறுப்பினருக்கு அதிகாரம் உண்டு. நியமனங்கள் எழுத்து மூலமும், உறுப்பினரால் இரண்டு அத்தாட்சிப் படுத்தும் சாட்சிகளின் சமூகத்தில் கையொப்பமிடப்பட்டும் இருத்தல் வேண்டும். அப்படியான எல்லா நியமனங்களும் பதிவுச்சுவடி செய்து வைக்கப்படும். உறுப்பினர்களின் பதிவேட்டிலும் நியமிக்கப்பட்ட ஒவ்வொருவரின் பெயரும் பதிவு செய்யப்படும். ஓர் உறுப்பினர் காலமாகி ஒரு ஆண்டு காலத்துக்குள் இறந்தவரால் சங்கத்திற்கு கொடுபட வேண்டிய ஏதாவது பணமிருந்தால் அதைக் கழித்துக்கொண்டு கடைசியாகவுள்ள நிதிவருடமுடிவில் கணக்கிட்டதற் கிணங்க அவருக்குரிய பங்குகளின்பெறுமதி அவரால் நியமிக்கப்பட்டவருக்குக் கொடுக்கப்படும். ஆனல் அந்த நியமனம் பெற்றவர் 7-ம் உபவிதியின்படி தகுதிவாய்ந்தவராக இருந்து, உறுப்புரிமை கோரி விண்ணப்பித்தால் அவர் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டு அந்தப் பங்குகளும் அவர்பேரில் ஒதுக்கப்படும்.

(2) ஒரு பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்புரிமை அச்சங்கத்தின் பதிவு முறைப்படி ரத்துச் செய்யப் படும்வரை செல்லுபடியாகும்

உறுப்பினர்களின் பொறுப்பு

15. இச்சங்கத்தின் கடன்களுக்கு உறுப்பினர் ஒருவரின் பொறுப்பு, அவரின் பங்குகளின் ஐந்து மடங்கோடு வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு பழைய அங்கத்தினர் இச்சங்கத்திலிருந்து விலகும் தேதியில் உள்ள கடன்களுக்கு அத்தேதியிலிருந்து தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு அவர் பொறுப்பாய் இருத்தல் வேண்டும். ஓர் உறுப்பினர் மரணமடைந்தால் அவர் மரணமடைந்த தேதியன்று இச்சங்கத்துக்குரிய கடன்களுக்கு அத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு இறந்தவரின் ஆதனங்கள் பொறுப்பாய் இருத்தல் வேண்டும்.

பதிலீடு செய்தல்

16. ஓர் உறுப்பினர்க்கோ பழைய உறுப்பினர்கோ, இறந்த உறுப்பினரால் நியமிக்கப்பட்டவருக்கோ இச் சங்கத்தின் எந்தக் கணக்கிலிருந்தாவது பணம் கொடுக்குமதியாயிருந்தால், அந்த உறுப்பினரிடமிருந்தோ, பழைய உறுப்பினரிடமிருந்தோ, இறந்த உறுப்பினரின் ஆதனத்திலிருந்தோ சங்கத்துக்கு வருமதியாயிருக்கும் ஏதாவது பணத்தைக் கழித்து சங்கத்தின் கணக்கில் பதிலீடு செய்து கொள்ளலாம்.

முதல்

17. இச்சங்கத்தின் முதல் பின்வருபவற்றை உள்ளடக்கி

யுள்ளது:—

(1) பங்குகளின் விற்பனையால் பெறப்பட்ட பணம்.

(2) வைப்புப் பணங்கள்.

(3) கடன்பட்ட பணம்.

(4) கிடைத்த லாபங்கள்.

(5) ஏதாவது நிறுவனத்திடமிருந்தோ அல்லது அரசிடமிருந்தோ பெற்றுக் கொள்ளப்பட்ட கொடைப்பணம்.

(6) பதிவாளரின் அங்கீகாரத்தோடு எந்த நிறுவனமோ அரசோ கொடுத்த மீட்கப்படும் பங்குகள்.

(7) பதிவாளரின் அங்கீகாரத்தோடு கிடைத்த அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட பணம்.

பங்குகள்

18. (1) ஒரு பங்கின்பெறுமதி ரூபா. 500/— ஆகும். சேரும்பொழுது எடுக்கும் ஒவ்வொருபங்கிற்கும் ரூபா.25/- கட்டவேண்டும். மீதிப்பணம் 19 காலாண்டுத் தவணைக் கட்டணங்களாகக் கொடுக்கப்படல் வேண்டும்.

ஒரு குறித்த வருடத்திலுள்ள பங்குப்பண தவணைப் பணங்கள் அதே வருடத்துக்குள் கட்டியாக வேண்டும்.

(2) இச்சங்கத்தின் பங்குகளின் தொகை அளவுபடுத்தப்படமாட்டாது.

(3) ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தது ஒரு பங்காவது வைத்திருத்தல் வேண்டும். கடன்வசதிகள் பெறவிரும்பும் உறுப்பினர்கள் வைத்திருக்க வேண்டிய பங்குகளின் தொகையை எவ்வளவு என்று காலத்திற்குக்காலம்பணிப்பாளர் சபை நிபந்தனை விதிக்கும். ஒருவருக்குள்ள பங்குகளின் தொகைக்கும் அவர் பெற்றுக் கொள்ளும் கடன்தொகைக்கும் திட்டமான விகிதம் ஒன்றுண்டு.

18 (4) ஒவ்வொரு பங்கின் பெறுமதியையும் ஒதுக்கப்படும்பொழுதே முழுதாகக் கொடுத்துவிடலாம்,

இச்சங்கத்தின் மொத்தப் பங்குகளின் முதலில் ஐந்திலொன்றுக்கு மேல் ஓர் உறுப்பினர் வைத்திருக்க முடியாது. இந்த உபவிதியில் குறிக்கப்பட்ட ஆகக்கூடிய அளவுக்கு மேலதிகமாக யாராவது உறுப்பினர் ஒருவர் பங்குகளை வைத்திருந்தால் அந்த மேலதிக பங்குகளை விற்று அதனால் கிடைக்கும் பெறுமதியை அந்த உறுப்பினரிடம் சேர்த்துவிட பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு. அல்லது அப்படியான பங்குகளை அவற்றின் முகவிலையிலும் பார்க்கக் கூடிய விலை கொடாது இச்சங்கத்துக்குக் கொள்வனவு செய்யும் அதிகாரம் உண்டு.

(6) பங்குகள் திருப்பிக் கொடுபடமாட்டாது. ஆனால் ஒரு நிதிவருட முடிவில் சங்கத்தின் உறுப்பினரல்லாதோருக்கு வைப்புப் பணமோ அல்லது கடனோ கொடுக்கவேண்டியில்லாமலிருந்தால், பணிப்பாளர் சபை விரும்பினால், அந்த நிதிவருட முடிவுக்கு முன் உறுப்புரிமை முடிவு பெற்ற ஒருவருக்கு அவர் வைத்திருந்த பங்குகளின் முகவிலைக்குக் கூடாத ஒரு தொகையைக் கொடுக்கலாம்.

(7) ஓர் உறுப்பினர் தனது பங்குஎதையும் வேறொரு உறுப்

பினருக்கோ அல்லது உறுப்புரிமை கோரும் உறுப்பினர் தகுதிகொண்டவருக்கோ பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரத்தோடு மாற்றி விடலாம்.

(8) உறுப்பினரொருவரோ அல்லது உறுப்புரிமை பெறும் தகுதிவாய்ந்தவரோ தான் இச்சங்கத்தில் பங்குகள் வைத்திருக்க முடியும்.

(9) தனது தேறிய இலாபத்திலிருந்து ஒதுக்குநிதிக்கும் மற்றும் சட்ட விதிப்படியுள்ள நிதிக்கும் பகிர்ந்தளித்தபின்னுல் இச்சங்கம் ஒரு பங்கு கைமாற்று நிதியினை ஏற்படுத்தலாம். உறுப்பினராக இருந்து விலகியவர்களுடைய பங்குகளை அவற்றின் முகவிலைக்குக் கூடாமலும், 18 (5) உப-விதியின்படி அனுமதிக்கப்பட்ட ஆகக்கூடிய அளவுக்கு மேல் வைத்திருக்கும் உறுப்பினர்களின் பங்குகளையும், 17 (6) உப-விதிக்குக் கீழ் கொடுத்த பங்குகளையும் அந்த நிதியிலிருந்து கொள்வனவு செய்யலாம்.

### வைப்புப் பணம்

இச்சங்கத்திடம் கொடுக்கப்பட்ட வைப்புப்பணம் எதுவும் பணிப்பாளர் சபையாரால் விதிக்கப்படுகின்ற நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அடங்கும்.

### சங்கத்தின் ஆகக்கூடிய கடன்

20. காலத்துக்குக் காலம் உறுப்பினரல்லாதோரிடமிருந்து சங்கம் ஆகக்கூடிய எவ்வளவு தொகைவரை கடன் பட முடியும் என்பதைப் பொதுச்சபை தீர்மானிக்கும்.

### கிளைப் பொதுக்கூட்டங்கள்

21. (1) ஒரு கிளையினுடைய உறுப்பினர் பதிவேட்டில் காணப்படும் உறுப்பினர்களுடைய வருடாந்தப் பொதுக்கூட்டம் தேவையான விடயங்களை முடிவுசெய்வதற்கும், குறிப்பாக:-

(அ) ஒரு கிளைக்குழுவைத் தெரிவு செய்வதற்கும்,

(ஆ) சங்கத்தினதும் குறிப்பாக கிளையினதும் நடவடிக்கைகள் பற்றி பணிப்பாளர் சபையினுடைய ஆண்டறிக்கை பற்றியும், கணக்கறிக்கை பற்றியும், கணக்குப் பரிசோதகரின் அறிக்கைபற்றியும், சங்கத்தின் பரிசோதனை செய்த கணக்கறிக்கைபற்றியும் கணக்குப் பரிசோதகரின் அறிக்கை பற்றியும் ஆராய்வதற்கும்,

(இ) கிளைக்குழு தனது நடவடிக்கைகள் பற்றி சமர்ப்பித்த அறிக்கைகளை ஆராய்வதற்கும்,

(ஈ) சங்கத்தின் நடைமுறைகள்பற்றி கருத்துத் தெரிவிப்பதற்கும், யோசனை கூறுவதற்கும்,

(உ) மேற்சொல்லப்படும் சமுதாய, கல்வி, கலாச்சார, களியாட்ட நிகழ்ச்சிகள் பற்றி சிபார்சு வழங்குவதற்கும்,

(ஊ) சங்கத்தின் பணிப்பாளர் சபையினால் விசேடமாகத் தெரிவிக்கப்பட்ட விடயங்களைப்பற்றி ஆராய்வதற்கும் கூட்டப்படலாம்.

(2) ஒரு கிளையில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விசேட பொதுக்கூட்டங்கள் தேவையேற்படும் நேரங்களில் கூட்டப்படலாம்.

(3) ஒரு கிளையின் பொதுக்கூட்டம் ஆணையாளராலோ, ஆணையாளர் அதிகாரம் வழங்கிய வேறொருவராலோ, சங்கத்தின் தலைவராலோ, கிளைக்குழுவின் தலைவராலோ, பணிப்பாளர் சபையாலோ கிளைக்குழுவினாலோ, அந்தக் கிளைக்குழுவின் பெரும்பான்மையினரான உறுப்பினர்களாலோ கட்டப்படலாம்.

(4) 21 (3)ம் உபவிதியின் கீழ்கூட்டத்தைக்கூட்ட அதிகாரம் உள்ள ஒருவரோ அல்லது குழுவோ எழுத்துமூலம் அதனை கிளைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தால், அவர் அக்கிளையின் பொதுக்கூட்டத்தைக்கூட்டவேண்டும்

(5) 25க்குக் குறையாத அங்கத்தினர்களாலோ அல்லது அந்தக்கிளையின் அங்கத்தினர் பதிவேட்டிலுள்ள மொத்த உறுப்பினர்களின் மூன்றிலொரு உறுப்பினர்களோ — இவை இரண்டில் எப்பகுதியினர் குறைந்த தொகையினராகவுள்ளனரோ அவர்களால்கையொப்பமிடப்பட்டு எழுத்து மூலம் அறிவித்தல் கிடைக்கப்பெற்ருல் ஒரு கிளைக்குழு விசேட கிளைப்பொதுக் கூட்டத்தைக் கூட்டலாம். ஆனால் அப்படியானதொரு கூட்டத்தில் பேசப்படும் விடயம் சங்கத்தோடுதொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

(6) ஆணையாளராலோ அல்லது ஆணையாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவராலோ கூட்டப்படும் கூட்டத்தைத் தவிர எந்தவொரு கிளைப் பொதுக்கூட்டத்திற்கும் குறைந்தது ஏழு நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.

(7) ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரோ ஒரு கிளைப் பொதுக்கூட்டத்தைக் கூட்டுமிடத்து குறைந்தது 24 மணித்தியால முன்னறிவித்தல் கொடுக்கவேண்டும்.

(8) ஒரு கிளைப் பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்குள் அறிவித்தலில்கூட்டம் நடைபெறும் திகதி, நேரம், இடம், பரிசீலனை செய்யும் விடயம் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(9) ஆணையாளராலோ அல்லது ஆணையாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவராலோ கூட்டப்படும் கூட்டத்தைத் தவிர, குறைந்தது சமுகமளிப்பவர் 25 பேரோ அல்லது ஒரு கிளையின் உறுப்பினர் பதிவேட்டிலுள்ள உறுப்பினர் தொகையில் நாலிலொரு பங்கோ இந்த இரண்டில் எது குறைந்ததொகையோ அது ஒரு கிளைப் பொதுக் கூட்டத்தில் விடயங்களைத் தீர்மானிப்பதற்குத் தேவையான

எண்ணிக்கையாகும். ஆணையாளராலோ அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவராலோ கூட்டப்படும் ஒரு கிளைக் கூட்டத்திற்குத் தேவையான நிறைவெண் மூன்று பேராகும்.

(10) கிளைப் பொதுக்கூட்டத்தின்முன் வைக்கப்படும் ஒவ்வொரு விடயமும் தீர்மானத்தின் மூலம் நிர்ணயிக்கப்படும். சமுகமளித்த உறுப்பினர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் சாதகமாக வாக்களித்தாற்றான் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக்கருதப்படும்.

(11) ஒரு உறுப்பினருக்கான பங்குகளின் தொகை எவ்வளவாயினும் அவருக்கு ஒரு வாக்குத்தான் உண்டு. உரிமைகாட்டுதல் அனுமதிக்கப்படமாட்டாது. சமுகமளித்தஉறுப்பினர்களின் விருப்பத்திற்கமைய வாக்களித்தல் வாக்குச்சீட்டுமூலமோ இவைகளை உயர்த்தல்மூலமோ நடைபெறும்.

(12) ஒரு கிளைப்பொதுக் கூட்டத்திற்கு அதன் தலைவரோ, அவர் வராதவிடத்து உபதலைவரோ, அவ்விருவரும் வராதவிடத்து யாவரின் சம்மதத்தாலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினரோ தலைமைதாங்குவார். ஆனால் அவ்வாறான ஒரு கூட்டம் ஆணையாளராலோ அவரால் முறைப்படி அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவராலோ கூட்டப்பட்டால் அந்தக்கூட்டத்துக்கு ஆணையாளரோ அவர் அதிகாரம் வழங்கியவரோ, தலைவரோ தாம் விரும்பினால் தலைமைதாங்கலாம்.

(13) ஒவ்வொரு கிளைப் பொதுக்கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பும் அந்த கிளை அலுவலகத்திலுள்ள நிகழ்ச்சிக் குறிப்புப்புத்தகத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். இதனுடைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி தலைவரால் கையொப்பமிடப்பட்டு பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(வளரும்)

## கூறை

நாம் உடுத்தும் உடையைக் 'கூறை' என்றும் கூறுவதுண்டு. நீளமாக நெய்யப்படும் ஆடையைக் கூறு கூறாக ஆக்குவதால் அதற்குக் கூறை என்று பெயர் வந்தது. கூறுபடுத்தி வேறுபடுத்தும் நெசவுத் தொழில் நடைபெற்று வரும் ஊருக்குக் ''கூறைநாடு' என்னும் பெயர் ஏற்பட்டது. கூறைநாடு என்பதைத்தான் இப்போது நாம் 'கொர நாடு' என்று அழைத்து வருகின்றோம்.

—கூட்டுறவு

# உருளைக்கிழங்கு உற்பத்திப்பெருக்கச் செய்கை

**1. விதைப்புக்குமுன்னர் தொற்றுநோயை நீக்கல்**

விதை கிழங்கைப் பீடிக்கும் தொற்றுநோயை நீக்க, விதையை நாட்டும் முன்னர் **"செரசான்"** என்னும் வித்து தொற்று நோய் நீக்கியில் பரிகரித்துப் பாவித்தல் நலம். ஒரு அவுன்ஸ் **"செரசான்"** தொற்று நீக்கியை 5 கலன் நீரில் கலந்து—28 இருத்தல் உருளைக் கிழங்கைப் பரிகரிக்கலாம்.

**2. பிற்கூற்று வெளிறல் நோய்(Late Blight)**

இந்நோய் ஒரு வகை பங்கசினால் உண்டாகின்றது. இதைக் கட்டுப்படுத்த "**அன்றக்கோல்**" $1\frac{1}{2}$ இருத்தல் 50 – 60 கலன் நீரில் கலந்து இலைகளின் மேற்புறமும், கீழ்ப்புறமும் நன்கு தோயும் வண்ணம் ஒரு ஏக்கருக்குத் தெளித்தல் வேண்டும்.

**3. ஆணைப் பேன்** (எப்பிலக்னே வண்டு)

உருளைக்கிழங்குச் செடியில் இருந்து இப் பூச்சியை அகற்ற

(1) பொலிடோல் E 605 — 1 அவுன்ஸ் 8 — 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும் அல்லது

(2) பொலிடோல் M — 1 அவுன்ஸ் 8 — 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும் அல்லது

(3) பொலித்தியோன் — 1 அவுன்ஸ் 4 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

**கிழங்கைத் தாக்கும் அந்திப் பூச்சி**

இதை அழிக்க லெபேசிட் 50% ஈ. சி. 1 அவுன்ஸ்சை 5 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 60 கலன் வீதம் தெளிக்கவேண்டும்.

**எறும்புகள்**

தோட்டத்தில் எறும்புகள் காணப்பட்டால் ஒரு அவுன்ஸ் லெபேசிட் 50% ஈ. சியை 4 கலன் நீரில் கலந்து பாவிக்கலாம். இந்தக் கரைசல் 400 அடிச் சாலுக்குப் போதுமானது.

கிடைக்குமிடம்:

**வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்**

111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்

# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு

மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

### வாடகைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| **நாடகம், நடனம்** | | |
| இரவு | 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| பகல் | ,, ,, | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| இரவு | ,, ,, | 175-00 |
| பகல் | ,, ,, | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | | |
| இரவு | முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| பகல் | முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் – பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 2 மணித்தியாலங்கள் | 200-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பிணை** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

**வ. ஐ. மே. சபை**
12, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238



Edited & published by T. SEENIVASAGAM, B. A., J. P. residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Northern Division Co-operative Federation, Ltd., K.K.S. Road, Jaffna and printed at N. P. Co-op. Printing & Publishing Socy., Ltd., Jaffna.